புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# வன்மம் நாவலின் விளிம்புநிலை மக்களின் சமூக சூழல்

**அ.மனமலர் உற்பவி**
பதிவு எண்:BDU2010632778611
பார்வை எண்:DUD/PhD/19/0718
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர் தமிழ்துறை
குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக்கல்லூரி(த) பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைப்பு பெற்றது
தஞ்சாவூர் – 07. தமிழ்நாடு, இந்தியா.

**முனைவர்.ச.பெரியநாயகி**
ஆய்வு நெறியாளர் தமிழ்த்துறை,
குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக்கல்லூரி(த) பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைப்பு பெற்றது
தஞ்சாவூர் – 07. தமிழ்நாடு, இந்தியா.

**முன்னுரை:-**

என்னம் போல் வாழ்க்கை, நீ ஒருவருக்கு எதை செய்ய நினைக்கின்றாயோ அதுவே உனக்கு கிடைக்கும் என்பார்கள். பரந்து விரிந்து காணப்படும் உலகில் சாதி என்ற சொல் ஒரு தனித்தனி கூட்டமாக உருவெடுத்து இன்று ஒவ்வொரு ஆலமரமாக மாறி காணப்படுகிறது. அதில் உயர்ந்தவன் "மேல்" சாதி அவர்களுக்கே அனைத்திலும் முன்னுரிமை. அவனுக்கு வேலை செய்து கொடுப்பவன் தாழ்ந்தவன் அவன் கீழ்சாதி. அடிமை. விளிம்புநிலை மக்கள் என்றும் கூறுவர். மையத்தில் இருப்பவன் சாதியிலும், பொருளாதாரத்திலும் "மேல்தட்டு" அதாவது உயர்சாதி என்றும், விளிம்பில் இருப்பவன் பொருளாதாரத்தில் பின்தங்கியும் பிறப்பாலும் அவன் "கீழ்தட்டு" என்றும் மனிதனுக்குள் மனிதனே பிரித்து வைத்த "விதி" என்ற "சதி" இப்படிப்பட்ட "சாதி" என்ற "சதி" வரையறையை உடைக்கும் வகையில் வன்மம் என்ற நாவல் எழுதப்பட்டதாக காணப்படுகிறது. நாவலின் துவக்கம் தற்கால கிறிஸ்தவ மதம் சார்ந்த நாவலாகும். அதில் இருவேறு சாதி இன மக்களுக்கு இடையில் நடக்கும் பிரச்சனைகளையும் அவர்களுக்கு பிரச்சனைக்கு காரணமாக இருக்ககூடிய வேறு சாதியின மக்களையும் பற்றியும் அறிய முடிகின்றது. அந்த சமூக சூழலில் இருந்து அவர்கள் வெளிவருவதையும் அவர்கள் பிரச்சனைக்கு அவர்களே தீர்வுகளை மேற்கொள்வதையும், வன்மத்தை விட்டு அனைவரும் சமம் என்று வாழ்வதையும் உணர்த்தும் சமூக சூழலை கூறும் வகையில் அமைந்துள்ளது.

**கதைக்கரு:-**

இரண்டு இருவேறு சாதிகளுக்கு இடையில் பிறசாதி மக்கள் தூண்டுதலால் ஏற்படும் பிரச்சனைகளும் அவற்றை பற்றி அறிந்து இருவேறு பிரிவின மக்கள் தங்களுக்குள் தாமே சமாதானமாக மாறி கீழ்சாதி மக்களை மோதவிட்டு வேடிக்கை பார்ப்பவர்கள் மத்தியில் மேல்சாதி மக்கள் கண்முன் ஒற்றுமையாக சேர்ந்து வாழும் சமூக சூழலை கூறுவது ஆகும்.

**கதாபாத்திரங்கள் :-**

சாமிநாதன், சின்ன சாமி நாயக்கர், ஆரொக்கியம், ரெங்க நாயக்கர், பழனிவேல் நாயக்கர், கருப்பசாமி பிச்சை மூர்த்தி, ஜெயராசு, அந்தோணி.

**துணை கதாபாத்திரங்கள் :-**

ஆப்ரகாம், ஜெகநாதன், இன்னாசி, அருள்மேரி, புஷ்பம், ஜோசப், சீனிவாசன், சுரேஷ், ஜெயசீலி, மரிய நாதன், செவத்தியான், ராசேந்திரன், லோகநாதன், கார்மேல் மேரி, சின்னப்பன், சேசு, காளிமுத்து, முத்து லெட்சுமி, அமலோர்பவம், காணிக்கை மேரி, சமனசுமேரி, ரோஸ்மேரி, இருதயமேரி, முனுசாமி, வில்சன், ஜெயபாலன், சரோஜா, மாசிலாமணி, சவரியப்பன், முத்துக்குமார், மரியலூர்து மற்றும் ஊர் மக்கள்.

**ஆய்வு சுருக்கம் :-**

இரண்டு கீழ் சாதி இனத்து மக்கள் ஒன்று சேர்ந்தால் தனக்கு கீழ் அடிமையாக இருக்க மாட்டார்கள் என நாயக்க மார்கள் நினைத்து பறையர்களையும் பள்ளர்களையும் சேராமல் இருக்க பள்ளர்களை தூண்டி விட்டு பின் அதனை அறிந்த பள்ளர்களும் பறையர்களும் ஒன்று சேர்ந்து நாயக்கர்கள் முன் ஒன்றாக இருப்பதையும், அவர்களால் இரு வேறு சாதி மக்களுக்கு இடையில் ஏற்பட்ட பிரச்சனைகளையும் அதனால் ஏற்பட்ட இன்னல்களையும் அதனை சீர் செய்ய அவர்கள் மேற்கொண்ட தீர்வுகளையும் வன்மம் என்ற நாவலில் இருக்கும் விளிம்பு நிலை மக்களின் சமூக சூழலை எடுத்துரைப்பதாக அமைகின்றது.

**கதை சுருக்கம்:-**

கண்டம்பட்டி கிராமம் பெரிய ஊர். புலதரப்பட்ட சாதி மக்கள் வசித்து வருகின்றார்கள். பறையர்கள் நான்கு ஐந்து தெருக்கள் இருப்பார்கள். பள்ளர்களும் நான்கு ஐந்து தெருக்கள் இருப்பாரகள். கொஞ்சம் தள்ளி கள்ளர்கள், அதனை அடுத்து மூப்பனார், தேவர்கள், செட்டியார்கள், ஆசாரியார்கள், பிள்ளைமார்கள், நாயக்கர்கள், நாடார்கள் இருப்பார்கள். கிழக்கில் இருந்து மேற்கில் போக போக சாதியும் அந்தஸ்த்தும் உயர்ந்து கொண்டே போகும். இதுல பறைகள் மட்டும் கிறிஸ்தவங்களா இருந்தாங்க. பறையர்களும் பள்ளர்களும் நாயக்கர்கிட்டையும் நாடார்கிட்டயும் வேலைக்கு போவார்கள். இதுல மத மாற்றத்தால பறையர்கள் படிக்க தொடங்கினார்கள். அது சில காலத்தில மாறி அவங்க நாயக்கர்கிட்ட இருக்கிற இடத்தை ஒத்திக்கு வாங்கி இவங்களே வெள்ளாமை பண்ண தொடங்கினார்கள். கூலிக்கு போறதை கொஞ்சம் கொஞ்சமா நிறுத்திக்கிட்டாங்க. அதிகமா யாரும் நாயக்கர்கிட்டயும் நாடார்கிட்டயும் வேலைக்கு போறத குறைச்சிகிட்டார்கள். ஆனா பள்ளர்ங்க மட்டும் போய்கிட்டு இருந்தார்கள். ஆனா இவங்களும் பறையர்களை பார்த்து நாமளும் இனிமேல் நம்ம பிள்ளையை படிக்க வைக்கணும் நினைச்சு அவங்க பிள்ளைங்களையும் படிக்க அனுப்பினார்கள். ஒரு சிலர் மட்டும் நாயக்கர்ங்க வீட்டுலயே தங்கி வேலை செஞ்சி அவங்க மிச்சம் மீதி கொடுக்கிற கஞ்சியை குடிச்சிட்டு அவங்க வயக்காடு, மாட்டுக் கொட்டைகை கழனி தண்ணியில தங்கி வேலை பார்த்துகிட்டு இருந்தாங்க. இதனால் நாயக்கமார்ங்க எங்க பள்ளர்களும் பறையர்கள் மாறி நமக்கு கீழ வேலை செய்யாம போய்டுவாங்கன்னு நினைச்சி அவங்களுக்கு இடையில சண்டை மூட்டிவிட்டு இருந்தார்கள்.

ரெங்கநாயக்கரு வயல ஒட்டுநாப்புல பழனிவேலு நாயக்கர் வயல் இருந்தது அதுல கருப்பசாமி பள்ளரு தண்ணி பாச்சுனார். ரெங்க நாயக்கரு வயலுல மார்ராசு தண்ணிபாச்சுனார். பொழுதினிக்கும் ஒரே சண்டக்காடக இருந்தது. பழனிவேலு கருப்பசாமிய தூண்டிவிட்டு அவன விடாதடா எதா இருந்தாலும் நான் பாத்துக்கிறேனு சண்டைக்கு தூண்டிவிடுவார். அதனால அவரும் துணிஞ்சு சண்டைக்கு நிப்பார். மார்ராசுகிட்ட அப்படி ஒருநாள் தான் வாய் சண்டையில ஆரம்பிச்சு கைகலப்பாகி மார்ராச கருப்புசாமி கொலபண்ணி வயலுலையே பொதச்சிட்டான். அது தெரிஞ்ச பிச்சை மூர்த்தியும் வாயதிறந்து சொல்லல. மார்ராச கொலை செஞ்சு வயல்ல பொதச்சத தெரிஞ்சிக்கிட்ட பழனிவேலு நாயக்கரு கருப்புசாமிய காப்பாத்த பணத்தகொடுத்து சதிபண்ணி காப்பாத்திட்டார், கவலைபடாதடா நான் பார்த்துகிறேனு இனிமேல் எல்லாம் நமக்குதானு தூண்டிவிட்டாரு. அதனால அவனும் இன்னும் அதிகமா மிதப்புல திரிஞ்சான். பள்ளர்கள் இப்படி பண்ணுனத நினைச்சு பறையர்களுக்கு

கோவப்படதான் முடிஞ்சத தவிர அவர்களால் ஒன்னும் பண்ண முடியல. இதனாலயே இருவருக்கும் இடையில் ஒரு மனவருத்தம் இருந்தது.

ஆனாலும் பறையர்கள் தெருவில் நிறைய இளவட்ட பசங்க படித்து இருந்தார்கள். எல்லோரும் வெயியூர்ல போய் படிச்சுட்டு லீவுக்கு வரும்போது எல்லாம் புது பழக்கவழக்கங்களையும் சொல்லுவாங்க. அது அவங்க முன்னேற்றதுக்கு ஒரு சப்போட்ட இருந்தது. ஊருக்கு கிறிஸ்துமஸ்கு, நியூஇயர்க்கு வரும்போது போட்டி வைப்பாங்க, அதுல எல்லா சாதி பசங்களுக்கும் ஒன்ன சேர்த்து போட்டி நடத்துவாங்க. அது அவங்க ஊர் பாசறையில தான் நடக்கும். போட்டி வைப்பவங்க, போட்டி நடத்துறவங்க பெயரை எல்லாம் மைக்ல சொல்லுவாங்க. அவங்களுக்கே அது பெருமையாவும் அத பார்த்து மத்தவங்களுக்குப் பெருமைபட்டுக்குவாங்க. அவங்க, "கழனி கலைக்குழு" பெயர் வைத்தார்கள். பேயரை ஒலிபெருக்கியில் சொல்லும் பொழுது பெயரோடு படிப்பையும் சேர்த்து சொல்லுவாங்க. இளைஞர்களாக முடிஞ்சா ஊருக்கு நல்ல விசயங்கள லீவுக்கு வரும்போதெல்லாம் செஞ்சிட்டு தான் போவாங்க.

டாக்டர்.அம்பேத்காருக்கு சிலை வைக்கனும்னு அந்தோனி, சாமிநாதன், மற்ற இளைஞர்கள் எல்லாம் சேர்ந்து ஆபிரகாம் தாத்தா மூலமாக ஒருவழியா நாட்டாமையின் உதவியோடு அம்பேத்காரின் சிலை வைக்க அனுமதி வாங்கிகிட்டாங்க. அவங்க அனுமதியோட சிலை வாங்க நன்கொடை எல்லா சாதி மக்கள்கிட்டயும் வசூல் பண்ணாங்க, ஊர்மக்களும் ஆதரவு தந்தாங்க. ஒருவழியா ஜெயராசு, அந்தோணி என இளைஞர்கள் எல்லாரும், டாக்டர்.அம்பேத்கார் சிலை திறப்பு விழா எடுத்து அதுல பள்ளர்கள், பறையர்கள், நாடார்கள், நாயக்கர்கள் என எல்லாரையும் சமமா மேடையில உட்கார வச்சாங்க. அதுல சக்கிலியர்கள் மட்டும் மேடையில நாயக்கருகளுக்கு சமமா உட்கார தயங்கி கீழயே உட்கார்ந்துகிட்டாங்க. ஒவ்வொருத்தரா வந்து பேசினாங்க இறுதியில அந்தோணி வந்து பேசினான். அவன் பேசினதா கேட்டு எல்லாரும் பிரமிப்பா பார்த்தாங்க. முதல்ல பொறுமையா பேசத் தொடங்கிய அந்தோணி நேரம் போக போக சத்தமாக பேசத் தொடங்கினான்.

"நமக்கு சொல்வது என்ன? விடியலை நோக்கி புறப்படு.
அமைதியாய் இராதே! நீ ஆளாப்பிறந்தவன்! மனிதனகா
வாழப்பிறந்தவன்! என்று கூறுகிறது.
புரட்சியாளர் அம்பேத்கர் பாதையில் நாம் செல்வோம்.
புது உலகம் செய்வோம். சாதியற்ற சமத்துவ
சமுதாயத்தை படைப்போம். அதற்கு இன்றே
இந்த கனமே சபதம் எடுப்போம். ஜெய்பீம்"(1)

என்று உரக்ககுரலில் சொன்னதை கேட்டு அனைவருக்கும் மெய்சிலிர்த்து போய் அவனை பார்த்துக்கொண்டு இருந்தார்கள். அந்தோணி சொன்னது அனைவருக்கும் ஒரு புது உற்சாகத்தை கொடுத்தது.

இவங்க பன்றதை எல்லாம் பார்த்த பள்ளர்களும் இம்மானுவேல் சிலை வைக்கனும்னு ஆசைப்பட்டு நாமும் எல்லார்கிட்டையும் போய் நன்கொடை வாங்கி சிலை வைத்து விழா நடத்தனும்னு நினைத்தார்கள். பறையர்களுக்கு போட்டியா நாமளும் பெரிய ஆளுங்கனு காட்டிக்கனும்னு நினைத்தார்கள். பள்ளர்ங்க அவங்களுக்கு நாயக்காமார்களும் அவங்களுக்கு நீங்க ஒன்னும் சளைச்சவங்க இல்லைனு தூண்டிவிட்டுகிட்டுத்தான் இருந்தார்கள்.

இப்படி இருக்கையில பஸ்ஸ்டாண்டல டாக்டர்.அம்பேத்கர் சிலைக்கு பக்கத்துல கொடிகம்பியை பள்ளர்ங்க கட்டினார்கள். அதை பறையர்ங்க எடுக்க சொல்லி சண்டை போட்டார்கள். அது சாதாரண வாய் பேச்சாக தொடங்கியது நீ பெரிய ஆளா, நான் பெரிய ஆளானு வாய் வார்த்தை கைகளப்பா மாறி வன்மமா மாறிச்சு. அதனால பள்ளர்ங்க கம்பில கைய வச்ச சேசுநாதன் எப்ப எல்லாம் தனியா இருப்பான் அப்படின்னு வேவு பார்க்க ஆரம்பிச்சாங்க. சரியான நேரம் பார்த்து சேசுநாதனோட கைய மொதல்ல வெட்டுனார்கள். அப்பறம் அவன் ஓட ஓட முதுகு, கால் என உடம்பு பூரா வெட்டி கொன்னுடாங்க. உடம்பெல்லாம் இரத்தம் அதிகமாக வெளியில போய் அவன் அங்கேயே செத்துட்டான். அது

தெரிஞ்ச பறையர்கள் நாலு பேரு சேர்ந்து பள்ளர்கள வெட்டுனாங்க. அதை கேள்வி பட்டவங்க சொந்தக்கார வீட்டுக்கு வந்த பறையர்கள பஸ்ஸ்டாண்டல வெட்டி கொன்னாங்க. அதை கேள்விபட்ட பறையர்கள் கத்தி, கம்பு எல்லாம் எடுத்துகிட்டு பள்ளர்தெருவிற்கு போய் தெருவில் யாரும் இல்லாததானால துணியில மண்ணென்ணெய நனைச்சு எல்லா கூரையிலயும் போட்டுட்டு பத்தவைத்து விட்டு வந்துட்டாங்க. ஊரு சாவடியில சேசுநாதனுடைய பொனத்த பாக்கையில அங்க இருந்த பொம்பளைங்க எல்லாம் அழுது அலறுனாங்க. ஒருத்தரை ஒருத்தர் கட்டி பிடிச்சுகிட்டு அழுது பொலம்புனாங்க, அடுத்து என்ன நடக்க போகுதுன்னு தெரிஞ்சிக்கிறதுக்குள்ள போலிஸ் வேன்ல நிறைய போலிஸ்ங்க வந்துடாங்க. வந்தவங்க என்ன ஏதுன்னு கூட கேக்காம எல்லா பொம்பளைங்களையும் வண்டியில ஏத்துனாங்க. கலெக்டர்கிட்ட வந்து மனு கொடுங்க சொன்னாங்க. அத கேட்டு நம்பி எல்லா பொம்பளைங்களும் வேன்ல ஏறுனாங்க. ஆனால், போற வழியில அவங்கள ஏமாத்தி அழைச்சிகிட்டு போறத தெரிஞ்சு சத்தம் போட்டாங்க. அத கேட்ட போலிஸ் ஒருத்தன் லத்திய எடுத்துகிட்டு வந்து அடிச்சு சத்தம் போட்டா அடிதான்னு சொல்லி எல்லாரையும் பயமுறுத்தி போலிஸ் ஸ்டேசனுக்கு அழைச்சிட்டு போய் அவங்கள ஜெயில்ல போட்டாங்க. அது எல்லாருக்கும் அதிர்ச்சியா இருந்துச்சு. எப்படி இங்க இருந்து தப்பிக்கிறது, ஊர்ல ஒரு ஆம்பளைங்க கூட இல்ல, யாரு வந்து நம்மள காப்பாத்துவாங்கனு பயந்தாங்க.

செல்லக்கிளி மட்டும் பயத்தமறச்சிக்கிட்டு ஒரு போலிஸ்கிட்ட போய் அய்யா நாங்க என்ன தப்பு பண்ணுனோம் எங்ககிட்ட பொய் சொல்லி இங்க கூட்டிக்கிட்டு வந்துட்டிங்க அங்க எல்லாம் போட்டது போட்டபடி கிடக்கு. ஒருத்தி வயித்துபுள்ளகாரியா இருக்கா, தொட்டில்ல தூங்குன புள்ளய விட்டுட்ட வந்துருக்கோம். அது அழுதா கூட கேக்க நாதியில்ல. சேசுநாதன் பொண்டாட்டி அவ புருசன் முகத்தகூட பாக்கல. ஏன் இப்படி பன்றீங்கனு கேட்டு அழுதா. அதுக்கு போலிஸ்காரர் நான் ஒன்னும் பண்ண முடியாது நாளைக்கு மேல் அதிகாரி இன்ஸ்பெக்டர்கிட்ட சொல்லுமானு சொல்லிட்டு போய்ட்டார். இத பார்த்த இன்னொரு போலிஸ்காரன் லத்திய எடுத்துக்கிட்டு வந்து எல்லாரையும் அடிச்சான். அதுல ஒருத்தருக்கு அடிச்ச அடியில கருவே கலைஞ்சுடுச்சு. அதெல்லாம் பார்த்து ரொம்பவே மனசு உடைஞ்சு போயிட்டாங்க.

போலிஸ்காரர் சொன்னது மாதிரி மறுநாள் காலையில இன்ஸ்பெக்டர் வந்தார். செல்லக்கிளி தைரியத்தை வரவச்சிக்கிட்டு அவங்க நிலைமைய பத்தி சொன்னா. அவங்க சொன்னத கேட்டு பாதிபேத்த மட்டும் வச்சிக்கிட்டு மீதிபேரை அனுப்பிட்டார். அவங்க ஊருக்கு வந்து மத்தவங்கள எப்படி அங்க இருந்து அழைச்சிட்டு வரதுன்னு நினைச்சி யோசிச்சிட்டு இருந்தாங்க. இதற்கு இடையில் ரோஸ்மேரி மாட்டுவண்டிய எடுத்துக்கிட்டு ஊர்ல இருக்குற பொம்பளைங்கல அழைச்சிக்கிட்டு போஸ்ட்மாடர்ம் பண்ணியிருந்த சாமிநாதன் மற்றும் இருவரை எடுத்துட்டுவர கிளம்புனாங்க, ராணி மாட்டுவண்டிய நல்லா ஓட்டிட்டு போனா. அங்க போய் பிணங்களை வாங்கிட்டு வந்து கல்லரையில பெரிய குழியா வெட்டி மூனுபேத்தையும் ஒன்னாவே பொதச்சிட்டாங்க. அதுக்கப்பறம் ஊருங்கள்ல ஆம்பளைங்க யாரும் இல்லாததனால போலிஸ்காரங்க பொம்பளைங்கல அடிக்க ஆரம்பிச்சாங்க. அந்த போராட்டத்தையும் பொம்பளைங்க இந்த நிலமையில இருந்து தப்பிக்கிறதுக்காக சாமியாரை போய் பார்த்துட்டு வரது, ஜெயில்ல இருக்க பொம்பளைங்கல போய் பார்த்துட்டு தைரியம் சொல்லிட்டு வரதுமா இருந்தாங்க. கொஞ்சம் கொஞ்சமாக நிலைமையும் மாறியது. பள்ளர்ங்க குமரேசன் நாயக்கரு தொழுவத்துல ஒழிஞ்சு இருந்தாங்க. பறையர்ங்க ஊரவிட்டு வெளிய இருந்தாங்க. ஒருவழியா கொஞ்சம் கொஞ்சமா வெளிய வந்து போலிஸ்கிட்ட சரணடைஞ்சாங்க. யாருமேல தப்புன்னு போலிசும் விசாரிச்சாங்க. ஒருவழியா சண்டைவந்து எதுக்கு சமாதானமா போயிடலாம்னு முடிவு எடுத்தார்கள். அதுக்கு வெளியாளுங்க யாரையும் கூப்பிட வேண்டாம் நம்ம ஊர், நம்ம தெரு நாட்டாமை, நம்ம தெரு நாளு, ஐந்து பசங்க சேர்த்து வட்டமா உட்கார்ந்து ஒரு முடிவு எடுத்தாங்க. அதுக்கு ஏத்தாமாதிரியே எல்லாமே நடந்தார்கள். சேசுநாதன் கேஸ் வந்துச்சு பறையர்கள் யாரும் சாட்சி சொல்ல போகல்ல. அதுக்கப்பறம் அவர்களும் பறையர்களும்

ஓரளவு பேசத்தொடங்கினார்கள். பள்ளர்களும், பறையர்களும் இராசியா பேசினத கேள்விபட்ட பிற சாதி சனங்க என்ன இப்படி இருக்காங்கனு சொன்னாங்க. “மானம் ஈனம் இல்லாத பயலுங்கனு” சொன்னாங்க. வரப்போற பஞ்சாயத்து தேர்தல்ல பழனிவேல் போட்டி போட போறாங்கனு, அதுக்கு நீங்கதான் எங்கள ஜெயிக்க வைக்கணும்னு எறியிற தீயில எண்ணெய ஊத்துற கணக்கா குமாரசாமி நாயக்கரு சொன்னாரு. கண்டம்பட்டி வரலாற்றுல நாயக்கமாறுங்க மட்டும்தான் பஞ்சாயத்து பிரசிடென்டா இருந்து இருக்காங்க. அத எதிர்க்கிற விதமா பள்ளர்களும் பறையர்களும் ஒன்றா சேர்ந்து ஒரு முடிவு எடுத்தாங்க. பள்ளர் தெரு காளையனை பஞ்சாயத்து தலைவனா நிறுத்துனாங்க, அதற்கு பிரச்சாரமும் செஞ்சாங்க. அத பார்த்து நாயக்கமார்ங்களுக்கு வயித்துல புளிகரைச்சுச்சு. பிரச்சாரம் பன்னமாதரியே பள்ளர்தெரு காளையனே ஜெயிச்சிட்டான். ஜெயிச்சவனுக்கு விழாவும் நடந்துச்சு. முதல் முறையா பறையர்களும் பள்ளர்களும் ஒன்னா சமமாக உட்கார்ந்து பேசினாங்க. இனிமே நம்ம பிரச்சனையே நம்மளே பேசிப்போம். யாருக்கும் அடிமையில்லாம நம்மளும் எல்லாருக்கும் சரிசமம்தான்னு மேடையில் பேசினார்கள். “அம்பேத்கர் சொன்னது போல அரசியல் அதிகாரத்தை கைப்பத்தனும். அதுக்கு இது முதல்படியா இருக்கட்டும்”(2) இனிமே பள்ளர்தெருவும் பறையர்தெருவும் சண்டைபோடக்கூடாது எனவும் முடிவா இருந்தார்கள். “வன்மம்” இனிவரும் தலைமுறைகளாவது வன்மம் இல்லாமல் வன்முறை இல்லாமல் ஒற்றுமையாக இருக்கட்டும் என கதைச்சுருக்கம் அமைகிறது.

**சமூகமும் சூழலும்:-**

“நந்தன் மீது
முதன் முதலில் பற்றவைத்தீர்கள்
நாற்புறமும் இன்றுவரை
நின்று எறியுது”(3)

இறைவனின் படைப்பில் அனைவரும் சரிசமம் என்று வாய்வார்த்தையால் மட்டுமே நாம் சொல்லிக்கொள்ள முடிகிறது. பிறப்பாலும் பொருளாதாரத்தாலும் ஒருவன் உயர்ந்து இருந்தால் அவன் “மேல்சாதி” என்றும் “மையத்தில்” வாழ்பவன் என்றும் பிறப்பாலும் பொருளாதாரத்திலும் பின்தங்கி இருப்பவன் “கீழ்சாதி” என்றும் அதாவது, “விளிம்பு” என்றும் கூறுவார்கள். அப்படிபட்ட சமூகத்தில் வாழ்ந்து அந்நிலையில் இருந்து நாம் எப்படியும் அனைவரும் சமமாக இருக்க போராடுவது அந்த சமூகம் அதை ஏற்றுக்கொள்ள முடியாமல் அவர்களை துன்புறுத்துவதையும் காணமுடிகிறது. பேசுவதற்குகூட அவர்களின் அளவுகளை அளந்து வைத்து இருக்கிறார்கள். அவர்களது படிப்பையும் முன்னேற்றத்தையும் கண்டு கோவமும் பட்டார்கள் ஏலனமும் செய்கின்றார்கள்.

“நீங்க என்ன பெரியா கொம்பா? நீங்க இருந்தா நாங்க
சிரிக்க கூடாதா? பேசக்கூடாதா? இது சனநாயக நாடு
நாங்க எங்களுக்குள்ளயும் பேசுவோம், சிரிப்போம், வௌாடுவோம்
செயிப்போம் இந்தாபாத்தியா வாலிபால் வௌாண்டு செயிச்ச கப்பு
நல்லாபாத்துக்கோ!(4)

இவங்களோட சந்தோசமான வாழ்க்கையா சரிசமமாக நாயக்கமார்களுக்கு ஏத்துக்க முடியல. அவங்கலாம் நம்மகிட்ட வேலைக்கு வரனும் நம்பத்தர ஐந்து பத்த கொடுக்குறத வாங்கிகட்டு வேலைய முடிச்சிட்டு போகனும். அவங்க படிக்கிறதையோ, நல்ல துணிமணிகள போட்டுக்கிறதையோ அவங்களால ஏத்துக்க முடியல. அவங்களுக்கு சமமா இவங்கள பார்க்க தயாரா இல்ல. எங்க நமக்கு கீழ வேலை செய்ய வரம போய்டுவாங்களேன்னு நினைப்பும் இருந்தது.

**பிரச்சனைகளும் / தீர்வுகளும்:-**

“ஆதி மனிதன் தந்த தீயால்
உணவு வந்தது.
சாதி வெறியில் வந்த தீயால்
மனிதன் வெந்தான்”(5)

நாயக்கமார்கள் பள்ளர்கள தூண்டிவிட்டு பறையர்கள் பள்ளர்கள் மத்தியில் சண்டைய ஏற்படுத்துவார்கள். அதுக்கும் பறையர்கள் பள்ளர்கள் முடிந்த வரையில் போராடி போராடி பிரச்சனைக்கு காரணத்தை புரிந்துகொண்டு சமரசமா மாறிவிட்டார்கள். சில நேரத்தில் அவங்களும் கோவத்தில் புரிஞ்சிக்காம ஒருத்தவங்கள ஒருத்தவங்க வெட்டிக் கொண்டார்கள். அதுவும் சில காலத்துல சமாதானமாக போனது.

சராசரியா வாழ்க்கையில நமக்கு வேணுங்குற சாதராண உரிமைக்கூட அவங்களுக்கு சில நேரம் கிடைக்க போராட வேண்டியதாக இருந்தது.

"பச்சமல நாயக்கருகிட்ட செல்லவும் ஒரு நாள்அவரே
இவுங்ககுளிக்கிறயிடத்துல கரெக்டா வந்துட்டாரு
வந்தவரு கோவமா கத்துனாரு, ஏய் எல்லாரும் மேல
எந்துருச்சு வாங்கடா. இதென்ன ஒங்கப்பன் வீட்டுக்
கெனறுன்னா நெனச்சீங்க? இனிமேல் பட்டு இங்க
வந்து குளிச்சா நடக்குறதே ஹே….. ஆமா"(6)

பல வருசமா குளிச்ச கிணத்துல இனிமே குளிக்க கூடாதுனு அவங்கள விரட்டுனாங்க. ஆனா கிணறு வெட்டுறத்துக்கு மட்டும் அவங்கள பயன்படுத்திக்கிட்டாங்க. ஆனா அதோட பயனை அவங்க அனுபவிக்க உரிமை இல்லனு சொன்னாங்க. அவங்க குளிக்க வராம இருக்க கிணத்து படியில முள்ள வெட்டி போட்டாங்க. அதனால எல்லாரும் கம்மா கரையில குளிக்க துவங்குனாங்க.

பஸ்ஸ்டாண்டுல இருக்குற டாக்டர்.அம்பேத்கர் சிலைக்கு பக்கத்துல கம்பிகட்டுனாங்க. அதுக்கு பறையர்ங்க இப்படி கட்டாதிங்கப்பா இல்லனா அது நாளைக்கு நாம எதாச்சும் செய்யும்போது மேல படும்னு அவங்ககிட்ட பொறுமையா சொல்லி பாத்தாங்க. ஒருநாள் அவங்க கேக்காம இருக்கவும் சேசுநாதனே கம்பிய அறுத்துட்டான். அத வன்மமா வச்சிக்கிட்டு சேசுநாதன் தனியா இருக்கும் போது அவன வெட்டி கொன்னுட்டாங்க. அத கேள்விப்பட்டு பறையர்கள் பள்ளர்களை போய் வெட்டுனாங்க. இதுக்கு பதில் இதுன்னு ஒருத்தரை ஒருத்தர் வெட்டி ஊரே நிலைகொழஞ்சு போச்சு. எல்லா ஆம்பளைங்களும் ஊரே விட்டே ஓடிட்டாங்க. இத கேள்விப்பட்டு போலிஸ் ஊருக்குள் வரும்போது ஊருக்குள் ஒரு ஆம்பளைங்க கூட இல்ல. ஒரு ஆம்பளைங்ககூட இல்லாததால ஊர் பொம்பளைங்கயிடம் பொய் சொல்லி வேன்ல ஏத்திக்கிட்டு போய் போலிஸ் ஸ்டேசன்ல ஜெயில்ல போட்டுடாங்க. அதனால மனவலியும், சோகத்தோடும், அழுகையோடும் இருந்தாங்க. அதுல ஒருத்தர் போலிஸ்கிட்ட தைரியமா பேசி பாதிபேத்த வீட்டுக்கு அனுப்புனாங்க.

வெளியில வந்த பொம்பளைங்க ஆம்பளைங்க தொனை இல்லாம மீதி இருந்த பொம்பளைங்கல வெளியில எடுக்க போராடுனாங்க. இறந்தவங்க உடம்ப வாங்கிட்டு வந்து பொம்பளைங்கலே ஒன்னா சேர்ந்து ஒரு பெரிய குழியா வெட்டி மூனுபேத்தையும் ஒன்னாவே பொதச்சிட்டாங்க.

"பொம்பளைங்களா போய் இப்படி பொதைச்சிட்டு வரத
பாத்து போலிஸ்காரனுங்களுக்கு ரொம்ப ஆச்சரியமா போச்சு
பொட்ட கழுதைங்க இம்புட்டு துணிச்சலா இருக்காங்கனு பேசிகிட்டாங்க"(7)

போலிஸ்காரங்க பிரச்சனை பண்ணத மீறி பொம்பளைங்கள சேர்ந்து ஒன்னாதான் இருந்தாங்க. ஒருத்தருக்கொருத்து துணையாதான் இருந்தாங்க. கொஞ்சம் கொஞ்சமா அந்த பிரச்சனையும் சரியாகா ஆரம்பித்தது. பள்ளர்களும் பறையர்களும் ஒன்னா பேசத்தொடங்குனாங்க. ஊர் கூட்டத்துல இவங்கள தவிர வேற பிற சாதிக்காரவங்க முன்நிறுத்தல. பறையர்களும் பள்ளர்களும் ஒன்னா சேர்ந்து பேசி முடிவு எடுத்தாங்க. யாரையும் யாரும் இனி சண்டபோடக்கூடாது எனவும் முடிவுல தீர்மானமா இருந்தாங்க. சேசு கொலை வழக்கு வந்துச்சு பறையர்கள் யாரும் சாட்சி சொல்ல போகல்ல. பள்ளர்களுக்கு இது ஆச்சரியமாக இருந்தது.

ஒருவழியா அப்ப ஊர் பஞ்சாயத்து சட்டமன்ற பிரசிடென்ட் தேர்தல் வந்தது. பறையர்களும் பள்ளர்களும் ஒன்னா சேர்ந்து கூடி பேசி அதிக ஓட்டு பள்ளர்களும் பறையர்களும் தான்னு பேசி முடிவு எடுத்து பள்ளர் தெரு காளையனை நிறுத்துனாங்க.

அதுக்கு இரண்டு தெருக்காரங்களும் ஒற்றுமையா பிரச்சாரம் நடத்துனாங்க. காளையும் பிரசிடென்டா செயிச்சுட்டான். செயிச்ச காளையனுக்கு விழாவும் எடுத்தார்கள். அதுல பள்ளர்களும் பறையர்களும் ஒன்னா சமமா இருந்தாங்க. இனி நமக்கு ஒன்னு தேவைனா நம்ப பிற சாதிகாரங்ககிட்ட ஏன் கை கட்டி நிக்கனும். நம்ப நம்பளோட தேவைய நம்மளே பூர்த்தி பண்ணிக்கனும் அவங்க ஒற்றுமைய சத்தமா மைக்ல சொல்லி சந்தோசபட்டுக்கிட்டாங்க. இவங்க இப்படி இருக்குறது நாயக்கமார்களுக்கும், பிற சாதிமக்களுக்கும் வயித்துவ புளியகரைக்கிற மாதிரி இருந்துச்சு.

**முடிவுரை:-**

"சாதிகள் இல்லையடி பாப்பா" என்றார் பாரதி. சாதிகளற்ற சமுதாயம் அமைய சாதிகளை மட்டுமே மையமாக கொண்டு வாழும் சமூக சூழல் அகழ்வது மிக மிக அவசியம். பிறப்பால் அனைவரும் சமம். அதில் எதற்கு ஏற்றத்தாழ்வு! உழைப்பவன் விளிம்பில் இருக்கிறான். உழைப்பை பெற்றுக்கொள்பவன் மையத்தில் இருக்கிறான். கூலிக்காரனின் மகன் கூலிக்காரனகாவே இருக்க வேண்டியதில்லை. எவனும் எவனுக்கும் அடிமையில்லை. அனைவரும் அனைவருக்கும் சமம் தான். பொருளாதாரத்தாலும், பிறப்பாலும் ஒருவனும் இங்கு இழிவானவன் அல்ல. அப்படி இழிவுப்படுத்தினால் கல்வியாலும் வளரும் தலை முறைகளும் தகுந்த பதில் சொல்லும் என்பதற்கு வன்மம் நாவல் ஒரு எடுத்துக்காட்டாக அமைகிறது.

"உழைக்கும் மக்கள்
உங்களை எச்சரிக்கிறோம்
உருப்படியாய்
நெருப்பையினி பயன்படுத்துங்கள்".(8)

பிறப்பாலும், பொருளாதாரத்தாலும் ஒருவரை இழிவுபடுத்தினால் அவர்களை அதிகாரப்படுத்தி தனக்குகீழ் வைத்து கொண்டால், அவர்கள் ஒன்று சேர்ந்தால் மேல் இருப்பவர்களுக்கு என்ன நிலை வரும் என்பதையும் விளிம்பில் இருப்பவர் ஒன்று இணைந்தால் யாராலும் அவர்களுக்கு பிரச்சனை வராது என்றும், ஒற்றுமையாக இருந்தால் உடைக்க முடியாது என்றும் "வன்மம்" இல்லாத வன்முறை இல்லாத சமுதாயம் அமைவதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக அமையும்.

**அடிக்குறிப்பு:-**

1. வன்மம் - நாவல் - ப.71
2. வன்மம் - நாவல் - ப.72
3. ஜி.வி. கவிதைகள் - ப.85
4. வன்மம் - நாவல் - ப.25
5. ஜி.வி. கவிதைகள் - ப.86
6. வன்மம் - நாவல் - ப.37
7. வன்மம் - நாவல்கள் - ப.102
8. ஜி.வி. கவிதைகள் - ப.86

**துணைநூல் பட்டியல்:-**

1. பாமா – வன்மம் – முதல் பதிப்பு ஜனவரி – 2020
2. பாவை பிரிண்டர்ஸ் 16(142) ஜெனிஜான் சாலை, இராயம்பேட்டை சென்னை – 14.
3. ஜீவி கவிதைகள் - முதல் பதிப்பு - டிசம்பர் 2010, அகரம் வெளியீடு, நிர்மலா நகர், தஞ்சாவூர்.

********* ********* ********** ********* ********* ********** ********** **********